**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051874

1. District மாவட்டம் : DVAC PS: காவல்நிலையம் VLAC, HQRS Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 15 Date: நாள் 09.11.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7, 12
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 03.11.2020 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 17.00 hrs Time to : நேரம் வரை 18.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.11.2020 Time : நேரம் 18.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.11.2020 Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 km North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி AE/O&M/Sowcarpet East, Door No. 23, Malayppa Theru, Sevenwells, Chennai - 1.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. C.K. Kumaran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Deputy Inspection Cell officer (g) Address : முகவரி Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. P. Gajapathy, Foreman, o/o AE/O&M/Sowcarpet East, Chennai - 1 (Suspect officer)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
To process the information as per official procedure.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in Seperate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S.Anitha Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.S. Anitha 09/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு Informed to the Complainant.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.11.2020 at 15.30 hrs

Name: பெயர் K.S. Anitha
Rank: நிலை Inspector of Police No. எண் ………
SIC, V&AC,
Chennai-16.

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண் 15/2020 சட்டப்பிரிவு 7. 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

சென்னை-1, ஏழுகிணறு, மலையப்பா தெரு, கதவு எண் 23-ல் அமைந்த 110/33/11KV ஏழுகிணறு துணை மின்நிலைய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத் தணிக்கை தொடர்பாக திரு.C.K.குமரன் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்கள் 03.11.2020ந் தேதியிட்ட அளித்த புகார் மனு தொடர்பாக மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய உயர் அதிகாரியிடம் ஒப்புதல் பெற புகார் மனுவின் நகல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் மூலம் அனுப்பப்பட்டது. பின்னர் உரிய உயர் அதிகாரியின் ஒப்புதல் பெற்று இன்று 09.11.2020ந் தேதி மதியம் 13.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு.C.K.குமரன் அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுனர் |
|---|---|
| C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-600001. | காவல் ஆய்வாளர் அவர்கள்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,<br>சிறப்பு புலனாய்வுக் குழு-2,<br>ஆலந்தூர்,<br>சென்னை-16. |

<u>கடித எண்.174/2020 நாள் 03.11.2020</u>

ஐயா,

பொருள் : இருதுறை கூட்டுத் தணிக்கை - உதவி பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஏழு கிணறு துணை மின் நிலையம், சௌகார்பேட்டை, சென்னை-1 - கூட்டுத் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாக்குமூலத்தை மேல்நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - தொடர்பாக.

- - - - - -

சென்னை-600001, சௌகார்பேட்டை, ஏழு கிணறு துணை மின் நிலையம், மலையப்ப தெரு, கதவு எண்.23 என்ற விலாசத்தில் இயங்கி வரும் 110/33/11KV ஏழு கிணறு துணை மின் நிலைய அலுவலகத்தின் உதவி பொறியாளர் அலுவலகத்தில் இன்று (03.11.2020) மாலை சுமார் 5.00 மணி முதல் 6.00 மணி வரை நடைபெற்ற மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வுக் குழு-2, சென்னை-16 ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டுத் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலராகிய என் முன்னால் பதிவு

செய்யப்பட்ட மேற்படி அலுவலகத்தில் பணி புரியும் திரு.P.கஜபதி, ஃபோர்மேன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவைகளை இந்நிகழ்வின் போது தயாரிக்கப்பட்ட நடவடிக்கையுடன் மேல்நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை மாவட்டம்,
சென்னை-600001.

Sir,

Received the complaint on 03.11.2020 at 18.30 hrs. After obtained approval from Superior officers, I have registered a case in V&AC, HQRS, Cr.No.15/2020 U/s 7,12 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 09.11.2020 at 15.00 hrs and taken up for Investigation Sd/-(K.S.ANITHA) 09/11/2020 Inspector of Police, SIC, V&AC, Chennai-16.

<u>இருதுறை கூட்டுக் தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு:</u>

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்பு புலனாய்வுக் பிரிவின் காவல் ஆய்வாளர்கள் இணைந்து இன்று (03.11.2020) சென்னை-1, ஏழுகிணறு, மலையப்பா தெரு, கதவு எண் 23-ல் அமைந்த 110/33/11KV ஏழுகிணறு துணை மின்நிலைய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை மாவட்ட ஆய்வுக்குழு<br>அலுவலகம், சென்னை மாவட்டம்<br><br>2. திருமதி.K.S.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை.<br><br>3. திருமதி.S.சமீனாபானு<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை. |

சென்னை-1, ஏழுகிணறு, மலையப்பா தெரு, கதவு எண் 23-ல் அமைந்த 110/33/11KV ஏழுகிணறு துணை மின்நிலைய அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் அரசு பணிக்காக மேற்படி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் கையூட்டு பெறுவதாகவும், மேலும் மேற்படி அலுவலகத்திற்கு உட்பட்ட இடங்களில் அமைந்த பொது மக்களிடம் லஞ்சப்பணத்தை வசூல் செய்து வருவதாக இரகசிய நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது. மேற்படி தகவலை எனது உயரதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, இன்று பிற்பகல் 16.00 மணியளவில் எனது அலுவலக பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவலை சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் இருதுறையின் சம்மதத்தின்பேரிலும் எனது உயரதிகாரிகளின் அனுமதியின் பேரிலும் மேற்படி அலுவலகத்தில் இன்று 03.11.2020 இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

2) தொடர்ந்து இன்று 03.11.2020 சுமார் 16.10 மணியளவில், சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.K.குமரன் அவர்கள், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப் பிரிவு, காவல் ஆய்வாளர்கள் திருமதி.K.S.அனிதா, திருமதி.S.சமீனாபானு மற்றும் காவல்கள் சகிதம் ஏழுகிணறு துணை மின் நிலைய அலுவலகத்தில் பிற்பகல் 17.00 மணியளவில் இருதுறை கூட்டு தணிக்கை தொடங்கப்பட்டது.

3) மேற்படி சென்னை ஏழுகிணறு துணை மின் நிலைய அலுவலகமானது சுற்று சுவருடன் கூடிய பிரதான வாயிலானது கிழக்கு நோக்கி அமைந்திருந்தது. அதன் உள்ளே நுழைந்ததும் இந்த அலுவலகத்தின் கட்டிடமானது தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் காணப்படுகிறது. தரைதளத்தில் துணை மின்நிலையமானது தெற்கு வாசலுடன் காணப்படுகிறது. முதல் தளத்தில் உள்ள மேற்படி அலுவலகத்தில் நுழைவதற்கு மேற்கு திசையில் அமைந்த படிக்கட்டு வழியாக உள்ளே நுழைந்ததும் எதிர்புறம் கிழக்கு பக்கத்தில் மேற்கு வாசலுடன் AE/O&M/SOWCARPET/EAST அறை காணப்படுகிறது. அங்கு அலுவலகத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த அறையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4) அந்த அறையில் கிழக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் S.R.குமரகுரு என்றும், இவ்வலுவலகத்தில் சௌகார்பேட்டை கிழக்கு பிரிவு உதவி பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேற்படி திரு.S.R.குமரகுரு அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.2,000/- (ரூ.500X4) இருந்தது. இந்த பணம் குறித்து திரு.S.R.குமரகுரு அவர்களிடம் கேட்ட போது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். அவருடைய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூபாய் 2,000/- திருப்பி கொடுக்கப்பட்டது.

5) அதே அறையில் மேற்படி திரு.S.R.குமரகுரு அவர்களின் முன்பு இருக்கைக்கு இடது புறம் மேற்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் G.சரவணன் என்றும் தான் மேற்படி துணை மின் நிலையத்தில் வணிக உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 16,270/- (ரூ500X32, ரூ100X2, ரூ20X2, ரூ10X3) பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்க அவர் ரூபாய் 15,000/பெரியார் கிளை கனரா வங்கி ATMல் இருந்து எடுத்தாக அவருடைய கைபேசி எண் 9884499697-க்கு வந்த குறுந்தகவலை காண்பித்தார். மீதமுள்ள ரூபாய் 1,270/- குறித்து கேட்க தனது கைச்செலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மொத்த பணம் ரூபாய் 16,270/- திருப்பி அளிக்கப்பட்டது.

6) அதே அறைக்கு அருகில் வலது புறம் AE, OM, SEC SEVEN WELLS அறையும் அதற்கு அருகில் AE/OM/SEVENWELLS, Office அறையும் காணப்படுகிறது. மேற்படி அறைகளில் நபர்கள் யாரும் இல்லை. அதை தொடர்ந்து படிக்கட்டின் அருகில் இடது புறம் ஒட்டினார்போல் காணப்படும் தெற்கு வாசலுடன் கூடிய அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் P.கஜபதி என்றும் தான் இந்த சௌகார்பேட்டை அலுவலகத்தில் முகவர் முதல்நிலையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்டின் வலதுபக்க பின்பக்க

பாக்கெட்டிலிருந்து பணம் மற்றும் ரூபாய் 1,50,000/-க்கான இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் கணக்கு எண் 144801000011144 க்குரிய காசோலை எண் 451847 கொண்ட பெயர் நிரப்பப்படாத காசோலையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்த போது மொத்தம் பணம் ரூ.1,310/- (ரூ 500X1, ரூ100X8, ரூ10X1) இருந்தது. இந்த பணம் குறித்து கேட்ட போது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். அவருடைய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூபாய் 1,310/- திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் அவரிடம் மேற்படி காசோலை பற்றி கேட்ட போது தனது தங்கையின் கணவர் ரஞ்சன் என்பவர் மீஞ்சூர் அருகில் நந்தியம்பாக்கத்தில் கட்டிடம் கட்டியதற்கு கட்டிடம் கட்டும் பிரவீன் என்பவருக்கு கொடுக்க சொல்லி தன்னிடம் கொடுத்த காசோலை என்று கூறினார். அவருடைய விளக்கம் முன்னுக்கு பின் முரணானதாக இருந்ததால் மேற்படி காசோலையானது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

7) மேலும் அவருடைய மேஜையின் வலது புறம் டிராயரை தணிக்கை செய்யும்போது பெயர்கள் மற்றும் பணங்கள் குறித்து பேனாவால் கைப்பட எழுத்தப்பட்ட 28.09.2020 தேதியிட்ட வெள்ளை தாள் மற்றும் வெளிர் பச்சை நிற துண்டு சீட்டு காணப்பட்டது. இந்த துண்டு சீட்டு குறித்து கஜபதி என்பவரிடம் விளக்கம் கேட்க பிரவீன் என்ற கட்டுமான தொழில் செய்பவரிடம் துணை மின்நிலையம் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் கடன் தொகை பெற்ற விவரம் என்றும், மேற்படி பிரவீன் என்பவரிடம் துண்டு சீட்டில் காணப்படும் நபர்கள் கட்டிடம் கட்டுவதற்காக கொடுக்க வேண்டிய பணம் என்றும், மேற்படி துண்டு சீட்டில் காணப்படும் நபர்களுக்கு தான் வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்த விவரம் என்றும் அவ்வாறு வட்டிக்கு பணம் வாங்கி கொடுப்பதற்கு கமிஷன் தொகையாக ரூபாய் 10,000/- பெற்றுக்கொள்வதாகவும் முன்னுக்கு பின் முரணான பதில் கூறினார். மேற்படி வெளிர் பச்சை நிற துண்டு சீட்டில் தான் கைப்பட எழுதியதாகவும், வெள்ளைநிற தாளில் தான் சொல்ல சொல்ல தன் மகள் அஸ்வினி எழுதியதாகவும் கூறினார். அவருடைய விளக்கம் முன்னுக்கு பின் முரணானதாக இருந்ததால் மேற்படி துண்டுச்சீட்டுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) மேற்படி அறையை அடுத்து உதவி செயற் பொறியாளர் அலுவலகம் காணப்படுகிறது. உதவி செயற்பொறியாளரை குறித்து உதவி பொறியாளர் திரு.குமரகுரு அவர்களிடம் கேட்க உதவி செயற்பொறியாளராக திரு.கார்த்திகணேஷ் என்பவர் பணிபுரிபவதாகவும் களப்பணியாக வெளியே சென்றிருப்பதாக கூறினார். அந்த அறைக்கு வெளியே அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் எம்.சீனிவாசன் என்றும் தான் AE/O&M Sowcarpet வணிக ஆய்வாளாராக பணிபுரிவதாக கூறினார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்க அவர் தான் எதுவும் கொண்டுவரவில்லை என்று கூறினார்.

9) அதே அறையில் நின்றுகொண்டிருந்த G.ரமேஷ் என்பவரை விசாரிக்க தான் ஏழுகிணறு பிரிவில் மின்பாதை ஆய்வாளராக பணிபுரிவதாகவும், தனது சட்டை பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். இதை எண்ணிப்பார்க்க ரூபாய் 6220/- (ரூ500x7, ரு:200x8, ரு100x8, ரூ50x4, ரூ20x6) இருந்தது. இந்த பணம் குறித்து கேட்க அவர் தான் ATMலிருந்து எடுத்ததாக அவருடைய கைப்பேசி 9176565837 என்ற எண்ணிற்கு வந்த குறுந்தகவலை காண்பித்தார். அவர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூபாய்6220/- திரும்ப அளிக்கப்பட்டது.

10) அதே அறையில் நின்றுகொண்டிருந்த நபர்களை விசாரிக்க திரு.ராஜேந்திரன், ஏழுகிணறு பிரிவில் கம்பியாளராக பணிபுரிவதாகவும், தான் பணம் ஏதும் கொண்டுவரவில்லை என்றும், திரு.வெங்கடேசன், மின்பாதை ஆய்வாளராக பணிபுரிவதாகவும், தான் கை செலவிற்காக ரூ.1810/- கொண்டு வந்திருப்பதாகவும், திரு.சேகர், ஏழுகிணறு பிரிவில், முகவர் பணிபுரிவதாகவும், தான் கை செலவிற்காக ரூபாய் 580/- கொண்டு வந்திருப்பதாகவும், திரு.ராஜி, ஏழுகிணறு பிரிவில் கம்பியாளராக பணிபுரிவதாகவும், கை செலவிற்காக ரூபாய் 1420/- கொண்டு வந்திருப்பதாகவும், திரு.அசோக் குமார், ஏழுகிணறு பிரிவில் கம்பியாளராக பணிபுரிவதாகவும், தான் கை செலவிற்காக ரூபாய் 1000/- கொண்டு வந்திருப்பதாகவும், திரு.பாபு, ஏழுகிணறு பிரிவில் Helper-ராக பணிபுரிவதாகவும், தான் கை செலவிற்காக ரூபாய் 830/- கொண்டு வந்திருப்பதாகவும, தெரிவித்தார்கள். அவர்களுடைய விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் கொண்டு வந்த பணம் அவர்களிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

இந்த சோதனையின் முடிவில் மேற்படி கையால் எழுதப்பட்ட வெளிர் பச்சைநிற துண்டு சீட்டு, வெள்ளை தாள் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது.இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை இன்று 03.11.2020 சுமார் 18.00 மணியளவில் முடிக்கப்பட்டது. ஒப்பம்/-C.K.குமரன் 3.11.20 (Deputy Ico) ஒப்பம்/-A.சமீனாபானு 03/11/2020 ஒப்பம் P.கஜபதி 3/11/2020 FM ஒப்பம் K.S.அனிதா 3/11/2020 (K.S.ANITHA Inspector of Police SIC, V&AC, Chennai).

K.S. Anitha
09/11/2020
Inspector of Police
SIC, V&AC,
Chennai - 16.